செ. கு. எண்: 131 நாள்: 04.08.2018

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 4.8.2018

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், தென்கரை உள்வட்டம், மேலக்கால் கிராமத்தைச் சேர்ந்த திருமதி பிரேமா என்பவரின் மகன் திரு. ஞானபிரகாசம் என்பவர் மின் மோட்டார் பழுது நீக்கும் பணியின் போது, விபத்து ஏற்பட்டு உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வாடிப்பட்டி வட்டம், கருப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. ரவிச்சந்திரன் என்பவரின் மகன் திரு ராஜ்குமார் என்பவர் குட்லாடம்பட்டி அருவியில் குளிக்கச் சென்ற போது, தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வாடிப்பட்டி வட்டம், ரேத்தான் உள்வட்டம், போடிநாயக்கன்பட்டி கிராம உட்கடை பேட்டை புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சென்ராயன் என்பவரின் மகன் திரு. திருப்பதி என்பவர் வாய்க்காலில் குளிக்கச் சென்றவர், கால் தவறி ஆற்றில் விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஊஞ்சவேலம்பட்டி கிராமத்தில், பொள்ளாச்சி-உடுமலைப்பேட்டை செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் திருமதி ஜெயலட்சுமி, செல்வி ஸ்ரீநிதி, திரு. ஆனந்த கிருஷ்ணன், திரு நடராஜ் மற்றும் திரு. திருமுருகன் ஆகிய ஐந்து நபர்கள் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், ஆண்டிப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஆரான் என்பவரின் மகன் திரு. குமார் என்பவர் குட்டையில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிணத்துக்கடவு வட்டம், தேவணாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜெயக்குமார் என்பவரின் மகன் திரு. சேவியர் பிரைட்டன் குமார் என்பவர் ஆழியார் அணையில் மூழ்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், போந்தவாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அண்ணாமலை என்பவரின் மகள் சிறுமி தர்ஷினி என்பவர் ஆலய திருவிழாவின் போது, பட்டாசு வெடித்ததில், பலத்த காயமடைந்து

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்டம், பில்லனகுப்பம் தரப்பு, கே. திப்பனபள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னப்பன் என்பவரின் மனைவி திருமதி மூக்கம்மாள் என்பவர் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், பட்டரைச்சேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. சோலையப்பன் என்பவரின் மகன் திரு. காமாட்சி என்பவர் தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

அறந்தாங்கி வட்டம், பூவற்றக்குடி சரகம், திருநாளூர் கிராமத்தைச் சேர்ந்த திரு அய்யாக்கண்ணு என்பவரின் மகன் திரு. மாரிக்கண்ணன் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயரச் சம்பவங்களில் உயிரிழந்த மேற்கண்ட **14** நபர்களின் குடும்பத்தினருக்கு தலா ஒரு லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**